தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி.பி. 2023 மடங்கல் (செப்டம்பர் — I) விலை உருபா 1·50 (இதழ் எண்: 158)

தமிழ் நாட்டின் அனைத்து அரசியல், பொருளியல், தொழிலியல், உழவியல், இனவியல் சிக்கல்களுக்கு

ஒரே தீர்வு தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கையே

என்பதைத் தமிழினத் தலைவர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்!

இந்தியாவில் குமுகவியல், அரசியல், பொருளியல் நிலைகளில் முகாமையான இறுதி முடிவை எடுப்பது ஆரியப் பார்ப்பனரும், அவர்களுக்குச் சார்பான பெருந் தரகு முதலாளிகளுமேயாகும். இந்திய நடுவண் அரசிலோ, மாநில அரசுகளிலோ அவர்களுக்கு மாறான ஆட்சி அமையுமாயின், அதை வீழ்த்துவதற்கே தங்களின் அனைத்துவகையான தந்திரங்களையும் கையாளுகின்றனர். பல்வேறு அரசியல் கட்சிகள், மத நிறுவனங்கள் அனைத்தும் அவர்களின் உண்மை உருவங்களை மறைப்பதற்கான போர்வைகளே! ஒரு தனிமாந்தனிலிருந்து ஒட்டுமொத்த குமுகாய அமைப்பு முழுவதின் உணர்வு நிலைகளையும் ஒவ்வொரு நொடி நேர இயக்கத்தையும் பார்ப்பனியம் கட்டுப்படுத்துகிறது; தன்வயப்படுத்துகிறது. இச் சூழ்ச்சிகளைப் பொது மக்கள் உணராமல் இருப்பதற்கும் அவர்களின் சிந்தனையைத் திசை திருப்புவதற்கும் பொதுக் கல்வி தொடர்ந்து மறுக்கப்பட்டிருக்கின்றது. "சூத்திரனுக்கு எதைக் கொடுத்தாலும் கொடுக்கலாம்; ஆனால் கல்வியை மட்டும் கொடுக்கக் கூடாது" என்னும் மனு தர்மத்தின் நெறியே இதை மெய்ப்பிக்கும். இன்று கொடுக்கப்படும்

கல்வியும் பார்ப்பனியத்திற்கும் முதலாளியத்திற்கும் அடிமை வேலை செய்வதற்கானதே!

இதிலிருந்து மீள்வதற்கு ஒரே வழி இப் பார்ப்பனியத்தைக் கட்டிக் காக்கின்ற இந்திய அரசமைப்பைச் சிதைத்து, நமக்கு வேண்டிய வடிவத்தில் மீள உருவாக்கிக் கொள்ளுதலேயாகும். இறுக்கமாக்கப்பட்டுவிட்ட இந்திய அரசமைப்பை ஒரு கருங்கல் பாறைக்கு ஒப்பிடலாம். இக் கருங்கல் பாறையிலிருந்து தேவையான கற்களை நமக்கு வேண்டிய வடிவங்களில் பெற்றுப் பயன்படுத்துவதற்கு, அப் பாறையை உடைப்பதற்கான தொழிற் பட்டறிவுடையவர்களையே நாம் தேடிப் போக வேண்டும். கருங்கல் பாறையில் மேலோட்டமாகப் பார்த்தால் உள்ளே இருக்கும் பிளவுகள் தெரியாது. ஆனால் அத் தொழிலில் திறமை உள்ளவருக்கு, அதைத் தட்டிப் பார்த்தாலே எந்தெந்தக் கோணங்களில், எந்தெந்த அளவுகளில் உள்ளே பிளவுகள் இருக்கின்றன என்பது தெரியும்; எந்த வழியாக உடைத்தால் பாறையை எளிமையாகப் பிரிக்கலாம் என்பதும் தெரியும். அவ்வாறே இந்தப் பார்ப்பனியத்தாலும் தரகு முதலாளியத்தாலும் அழுத்தப்பட்டுச் சுரண்டப்படுகின்ற மக்களை விடுவிப்பதற்கு இப் பார்ப்பனியச் சூழ்ச்சியை முழுவதும் உணர்ந்த—மக்கள்மீது உண்மையான பற்றுள்ள மாந்த நேயச் சிந்தனையாளர்களையே நாம் தேட வேண்டும்; அவர்கள் காட்டுகின்ற வழியை நோக்கிச் செல்ல வேண்டும்.

பண்டைய வரலாற்றிலிருந்தும் அண்மைக் கால போலியான அரசியல் நாடகங்களிலிருந்தும் நாம் ஓர் உண்மையைத் தெளிவாகப் பார்க்கலாம். சாதியை எதிர்த்தவர்களையும், கடவுளையும், மதத்தையும் எதிர்த்தவர்களையும், தீவிரப் பொதுவுடைமைப் பொருளியல் கோட்பாடுகளைக் கொண்டு புரட்சி செய்யப் புறப்பட்டவர்களையும் முதல் எதிரிகளாக இப் பார்ப்பனியம் கருதவில்லை. இந்திய ஒருமைப்பாட்டு அரசமைப்பிற்குள் எந்தவகைப் புரட்சியும் பார்ப்பனியத்திற்கு எதிராக—முழுமையாக மாறிவிடாது என்பது இப் பார்ப்பனியத்திற்கு நன்கு தெரியும். இஃது ஓர் அசைக்கமுடியாத உண்மையுமாகும். ஆனால் இந்திய ஒருமைப் பாட்டிலிருந்து விலகித் தனித்தனித் தேசிய இனங்களாக விடுதலை பெறுவது ஒன்றையே தனக்கு எதிரான நிலையாகக் கருதுகிறது. இந்திய ஆட்சியாளர்கள், தங்களோடு முரண்படுபவர்களை, இந்திய அரசமைப்பிற்குள்ளேயே தங்களுக்கு வேண்டிய சிறு சிறு உரிமைகளைப் பெற்றுக் கொள்ள அழைப்பதையும், அதற்கு வெளியே எந்த வகை உரிமையும் அளிக்கப்படமாட்டாது என்பதில் உறுதியாக இருப்பதையும் நாம் அறிவுக் கண் கொண்டு தெளிவடைய வேண்டும். ஆக ஆரியப் பார்ப்பனிய முதலாளியத்தின் உயிர்நிலையே இந்திய ஒருமைப் பாட்டில்தான் இருக்கின்றது என்பதையும், அதை அழிப்பதற்கும் இவ்விந்தியக் கருங்கற் பாறையைப் பிளப்பதற்கும் தேசிய இனங்களின் விடுதலையே சரியான வழியாகும் என்பதில் நாம் தெளிவடைய வேண்டும்.

இந்திய அரசு என்னும் கருங்கல் பாறைக் குள்ளே அழுத்தப்பட்டுள்ள மக்கள் சாதிப் பிளவுகள், மதவியற் பிளவுகள், பொருளியல் பிளவுகள் போன்றவற்றில் சிறு சிறு அளவுகளில் இருந்தாலும், பெரும் பிளவுகளாக இருப்பது மொழி வழியான தேசிய இனங்களின் உணர்வுப் பிளவுகளே! இவ்வுண்மையைக் குமுகப் புரட்சியாளர்களின் வழிகாட்டுதல்களிலிருந்தும், இன்றைய மக்களின் நடைமுறைப் போராட்டங்களிலிருந்தும் நாம் உணர்ந்து கொள்ளலாம். எவ்வாறு அக் கருங்கல் பாறையின் தன்மையைப் புரிந்து கொண்டோன், பெரும் பிளவின் வழியாகப் பல இடங்களில் துளை போட்டு, தன்னுடைய ஆற்றல் முழுவதையும் செலுத்தி அப் பாறையைப் பிளப்பதைப் போல், இங்குள்ள குமுகாயச் சிக்கலை நுட்பமாகப் புரிந்து கொள்ள முடியாத பொதுமக்கள் வெவ்வேறு நிலைகளில் தனித் தனியாகப் போராடிக் கொண்டிருக்காமல், உண்மையான குமுகச் சிந்தனையாளர்கள் காட்டுகின்ற வழியில் தங்களுடைய முழுக் கவனத்தையும் ஆற்றலையும் செலுத்திப் போராடினால் நாம் எளிதாக நம் விடுதலையைப் பெறலாம். கற்பாறையைப் பிளக்கத் தெரியாதவன் எத்தனை ஆண்டுகள் பல இடங்களில் அடித்துக்கொண்டிருந்தாலும் அவனுடைய முயற்சியும் உழைப்பும் வீணாவதைப் போல் இந்தியாவிலுள்ள குமுகாய வரலாற்றுச் சிக்கலை நாம் புரிந்து கொள்ளாமல் வெவ்வேறு திசைகளில் போராடிக் கொண்டிருப்பது நம்மை நாமே வீணே அழித்துக் கொள்வதற்கு ஒப்பாகும். "நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும் வாய்நாடி வாய்ப்பச் செயல்"— என்ற திருவள்ளுவம் தனிப்பட்ட ஒருவருக்குற்ற நோயைப் பற்றி மட்டும் குறித்தது அன்று, தமிழினத்திற்குற்ற புற்றுநோயைக் குணமாக்குவதற்கான வழியையும் காட்டியதாக நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். இவ்வுண்மையை நம் திருவள்ளுவருக்கு அடுத்து முழுமையாகப் புரிந்து கொண்ட குமுகாய மருத்துவர் நம் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள்தாம் என்பதை நாம் முழுமையாக நம்ப வேண்டும். அத் திசையில் மக்களை ஒருங்கிணையச் செய்ய வேண்டும்.

—காரடிப்பட்டி க. கண்ணன், அறி.இ.
துணைப் பொதுசெயலாளர்; உ.த.மு.க.

இந்திய ஒருமைப்பாடு என்பது பொய்!
தேசிய இன விடுதலையே மெய்!

Scanned with CamScanner

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

நிறுவனர்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
தலைமையகம்: பறம்பை அறிவன், பொதுச் செயலாளர்
பறம்புக்குடி. 623 707. முகவை மாவட்டம், தமிழகம்.

செய்திகள், கருத்துகள், செயற்பாடுகள்!

1. அமர்த்த அறிவிப்பு - 9 (14-8-92)

1. தூய தமிழ் ஆய்வியக்கச் சார்பு அமைப்பு,

1. செந்தமிழ்க் கழகம்—அருப்புக் கோட்டை.

நெறியாளர் : திரு. புலவர். ***செந்தமிழ்க்கிழார்.***
செந்தமிழ் அச்சகம்,
63, விருதுநகர்ச் சாலை,
அருப்புக்கோட்டை, காமராசர் மாவட்டம்.

2. சமநிலைக் குமுகாயச் சார்பு அமைப்பு:-

1. சிந்தனையாளர் மன்றம்—பறம்புக்குடி :

நெறியாளர் . திரு. க. ***தியாகராசனார்,***
'ஆசிரியச் செயல்வீரர்',
சநதைக் கடைத் தெரு,
பறம்புக்குடி - 623 707.

2. உ த. மு. க சார்பியக்கம்.
சிந்தனையாளர் மன்றம்: செயலறிவிப்பு :

1. 'சிந்தனையாளர் மன்றம்' —உலகத் தமிழின முன்னேற்றக் கழக அறிவியல் அணுகு-முறைச்செயலகத்தின் சார்பு அமைப்பாகும்

2. உ.த மு.க அன்பர், ஆர்வலரன்றித் தமி-ழினத்தார் யாவரும், சிந்தனை உரிமை போற்றுவார் யாவரும் இணைந்தியங்கலாம்.

3. உறுப்பினர் உ.த.மு.க.வின் நெறிகளுக்கு உட்பட்டவராவர்.

4. சிந்தனையாளர் மன்றத்தவர் உ த மு க. உறுப்பினராதல் வேண்டும் என்பது கட்டாயமன்று.

5. சிந்தனையாளர் மன்றப் பொறுப்பாளர் உ.த.மு.க.வின் உறுப்பும் பொறுப்பும் உடையவர் ஆவார்.

6. சிந்தனையாளர் மன்றக் கருத்துகளும், வெளிப்பாடுகளும் நடைமுறையும் உ.த.மு.க.வின் ஆய்வுக்கும் முடிவுக்கும் உரியன ஆயினும், 'சிந்-தனையாளர் மன்றம்' தன்னுறுதி கொண்டியங்கும்.

7. உ.த.மு.க பற்றுமுறி வழி நன்கொடை திரட்டப் பெறும். நன்கொடையில் செம்பாதி உ.த.மு.க. தலைமையகத்திற்கு விடுக்கப் பெறல் வேண்டும்.

2. உ.த.மு.க. மாவட்ட அமைப்பாளர்க்கு :-

வணக்கம். தங்கள் மாவட்ட உ.த.மு.க. அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளுங்கள். செய-லகம் இருக்கும், தலைமையகம் இருக்கும்; சார்பு அமைப்புகள் இருக்கும், கிளைகள் தோன்றும்; இருக்கும்— இவைபற்றியெல்லாம் அமைப்புகள் அறிந்து அமைப்பு வேலைகளில் உதவுங்கள்.

'தமிழ்நிலம்' வெளியிடும் உ. த. மு. க. அறிவிப்புகளைக் கவனமாகப் படித்தறியுங்கள். 'தமிழ்நிலம்' பரப்புவதை 'அமைப்புவேலை'யாக எண்ணி மேற்கொள்ளுங்கள்.

மாவட்டத்தில் உள்ள உ.த.மு.க. உறுப்பினர்-கள் ஒவ்வொருவர் பற்றியும் அறிந்து, அவர்களை உரிய துறைகளில் ஈடுபடச் செய்யுங்கள்.

தமிழின அன்பர்களை, ஆர்வலர்களை உ.த மு.க.வில் இணையத் தூண்டுங்கள். உயர் கொள்கை ஏழினையும் எங்கும் பரப்பத் துணை நில்லுங்கள்.

மாவட்ட அளவில் செயலகச் சார்பு—அமைப்-புப் பொறுப்பாளர்களை இணைத்து மாவட்ட உ.த.மு.க.வை உருவாக்குங்கள், கிளைகள் ஏற்-படுத்துங்கள். நன்றி.

3. அயலக உ.த.மு க. அமைப்பாளர்-பொறுப்-பாளர்க்கு-அன்பான வேண்டுகோள்...!

தமிழின முன்னேற்றத்தைத் தலைமேற் கொண்ட, அயலகம் வாழ்கின்ற உ.த.மு.க. அன்-பர்க்கும் ஆர்வலர்க்கும்; அமைப்பாளர், பொறுப்பா-ளர் அனைவர்க்கும், வணக்கம். நமக்குள் உறவு கொள்ளத் '***தமிழ் நிலம்***' இதழ் மட்டுமே உள்ளது, இதன் வளர்ச்சியின் ஊடாக நம் உறவு மேம்பட வேண்டும். ஆளுக்கொரு கை கொடுத்தாலன்றிப் பொதுச் செயலாளரும், செயலகங்களும், தலைமை-யகமும் இயங்க முடியும் என்று கருதுகின்றீர்களா? "இதைச் செய்கிறேன். இதற்கென்ன செய்வோம்" என்று முன்வந்து செயல்பட உங்கள் அனைவரை-யும் வேண்டுகிறேன் '***தமிழ் நிலம்***' வழியாகவன்றித் 'தலைமையகம்' வழியாக உங்களோடெல்லாம் தொடர்பு கொண்டு வர உதவுங்கள். கருத்தாலும்,

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம் பார்க்க)

கறுப்புச் சட்டங்கள் எதிர்ப்புப் பொருட்குழு!

தமிழ் நாட்டில் தேசியப் பாதுகாப்புச் சட்டம், தடாச் சட்டம் போன்ற கொடிய கறுப்புச் சட்டங்கள் தங்கு—தடையின்றி ஏவப்பட்டு ஏராளமான குற்றமற்றவர்களும் ஏதுமறியாதவர்களும், —குறிப்பாகத் தமிழ் நாட்டில் தஞ்சம் புகுந்திருந்த ஈழத் தமிழர்கள் பலரும் காவலர்களால் தளை செய்யப்பட்டுச் சிறையில் பல்வேறு கொடுமைகளுக்கு ஆளாகி வருகின்றனர். மாந்த உரிமை நசுக்கப்படுகிறது. பேச்சுரிமை, எழுத்துரிமை பறிக்கப்படுகின்றன. அடுக்கடுக்கான பொய் வழக்குகள் போடப்படுகின்றன. மக்கள் நேய உணர்வு கொண்டோர் இவற்றைப் பார்த்துக் கொண்டு வெறுமனே இருக்க முடியாது. மக்கள் உரிமைகளைப் பாதுகாப்பதும், இருண்ட சிறைகளில் அடைபட்டுக் கிடப்போருக்கு விடிவு ஏற்படுத்துவதும் நமது தலையாய கடமையாகும்.

பொய் வழக்குகளை உச்ச நெறி மன்றம் வரை சென்று வழக்காட மக்கள் நேய உணர்வுள்ள வழக்கறிஞர்கள் சிலர் முன் வந்துள்ளனர். அவர்களின் உதவியோடு இவ்வழக்குகள் அனைத்தையும் நடத்த முடிவு செய்துள்ளோம். இந்த வழக்குகளை நடத்த ஏராளமான பொருள் தேவைப்படுகிறது. இதற்காகப் பல கட்சிகள், பல தமிழர் அமைப்புகள் ஆகியவற்றின் படிநிகராளிகளைக் கொண்ட **"கறுப்புச் சட்டங்கள் எதிர்ப்பு வழக்குப் பொருட் குழு"** ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பொருட் குழுவில் 'தமிழர் தேசிய இயக்கத் தலைவர்' பழ. நெடுமாறன், 'பாட்டாளி மக்கள் கட்சி'யைச் சேர்ந்த நெல்லிக் குப்பம் கிருட்டிணமூர்த்தி, 'தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சிச்' செயலாளர் பெ. மணியரசன், 'உலகத் தமிழின முன்னேற்றக் கழக நிறுவனர் பெருஞ்சித்திரனார், 'அறிவியக்கப் பேரவை அமைப்பாளர் பேராசிரியர் சாலை இளந்திரையன், திலீபன் மன்றத் தலைவர் தியாகு ஆகியோர் உறுப்பாண்மை பெறுகின்றனர்.

வழக்குப் பொருட் கொடைக்குத் உதவுமாறு மாந்த நேய உணர்வும் தமிழன் என்னும் உணர்வும் கொண்டவர்களையும், அமைப்புகளையும், கட்சிகளையும் பொருட் குழு வேண்டிக் கொள்ளுகிறது

இந்த விளக்கங்களைப் பழ. நெடுமாறன் அவர்களும், ச. இராமதாசு அவர்களும் விடுத்துள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்கள்.

வழக்குக்குப் பொருட்கொடை தர விரும்பும் அன்பர்கள் தொகைகளை அவ்வியக்கப் பொறுப்பாளர்களுக்கு அனுப்பலாம் அல்லது ஒப்படைக்கலாம்!

O

பறம்பை அறிவன் பக்கம்!

அரசியல் நேர்மை ஞாயம்!

நம் அரசியல் நோக்கம் எளிமையானது. 'இழிவுகள், பூசல்கள், ஏமாற்று இல்லாத அரசியல்' ஆனால் இன்றுள்ள அரசியலுக்கு இவையே பண்புகளாக அமைந்துள்ளன.

'கழுதை விட்டையில் முன்விட்டையா, பின்விட்டையா எது நல்லது?' என்று கேட்பதுபோல இன்றுள்ள அரசியல் கட்சிகளின் நடப்புகள் உள்ளன! அதற்குக் காரணம் ..?

"அரசியலில் நேர்மை, ஞாயம் உள்ளவர் தலைவைத்துப் படுப்பதில்லை" என்கின்றனர்.

நேர்மை, ஞாயம் குறித்த விளக்கங்கள் அவரவர் கூட்டத்தின் நலத்தை அடிப்படையாக வைத்தே தரப்படுகின்றன.

நாம் கொள்கையை முன்வைத்துப் பேசலாம். நல்லவர் கெட்டவர் என்று பிரித்துப் பார்த்துப் புரிந்து கொள்வது கடினமாக உள்ளது. ஏதேனும் ஒரு குற்றம், ஓட்டை சொல்லி எத்தகைய நேர்மையாளரையும் அரசியல் வலக்காரம், சூழ்ச்சி தந்திரம் கொண்டு 'தூக்கி எறிந்து' விட முடிகிறது! அரசியலில் 'புறக்கணிப்பு' ஒரு காலத்தில் புதிய ஆற்றலாக வளர்ந்தோங்க முடியும், 'ஒதுக்கிய குப்பை உயரும்' என்பது போல! குறிப்பாக ஒரு சிறிய விளக்கம் நம் சிந்தனை சரியானது என்பதைக் காட்ட உதவும் எனக் கருதுகிறேன் ..

'ஒரு தமிழர் நலம்' பேசும் இயக்கம். அதே வகையான நோக்கம் கொண்டுள்ள மற்றோர் இயக்கம்— ஒப்பிட்டுப் பார்ப்போம்!

ஒரு வகை இயக்கம்: தமிழ், தமிழினம் முன்னேற உலக அளவிலான தொடர்பு கொள்கிறது. அது,

1. தூய தமிழை நடைமுறைப் படுத்தாது.
2. தமிழின் பெயரைச் சொல்லி வரும் அனைவரையும் பாராட்டும்.
3. ஆரியப் பார்ப்பனிய வழிபாடு, சடங்குகளை எதிர்க்காது; முருகனை விடச் சுப்பிரமணியனையும் தமிழை விடப் பாராட்டுகளையும் நேசிக்கும்!
4. விளம்பரம்...பணம்... முதுகு சொறியும் கலையுடையது—வணிக மனம் கொண்டது!

மற்றோர் இயக்கம்:

தூய தமிழில் கண்டிப்பு;
ஆரிய வழிபாட்டினை எதிர்ப்பதில் உறுதி,
தமிழரின் உட்பகைமேல் கவனம் கொண்டது!
வணிக, விளம்பர நோக்கமற்றது!

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்த் தேசிய இன விடுதலையின் தேவையும் முரண்பாடுகள் கூர்மையடைவதற்கான காரணிகளும்!

முன்னுரை:- ஒரு குழந்தை தாயின் வயிற்றிலிருந்து விடுதலையாகி வெளியே வருகின்றது. ஆனால் அக் குழந்தை ஆணாகவோ பெண்ணாகவோ படிப்படியாக வளர்ந்து இறுதியில் இறக்கும வரை, இக் குமுக அமைப்பில் பல்வேறு தளைகளோடு போராடி மடிகின்றான்-மடிகின்றாள். இந்தத் தனிமாந்தப் போராட்டங்கள் இணைந்து, இவ்வுலகில் ஒட்டு மொத்த குமுகப் போராட்டமாகின்றது. தனி மாந்த விடுதலையும் மாந்த இன விடுதலையும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாகும். மாந்த நேயச் சிந்தனையாளர்களின் விருப்பமும் அதற்கான தேடலும் உழைப்பும் அதை நோக்கியே இருந்திருக்கின்றன—இருக்கின்றன'. மாந்த இன வரலாற்றை—அதன் விடுதலையைக் குமுக அறிவியல்படி ஆய்ந்து, அதைச் செம்மைப் படுத்துவதற்கும், தொடர்ந்து நிலைப்படுத்துவதற்கும், அதற்கான கருத்தியலை உருவாக்குவதற்கும் காலந்தோறும் பல்வேறு அறிஞர்கள் உழைத்துக் கொண்டே வருகின்றனர். அவ்வகையில் இவ்வுலக நிலப் பரப்பில் ஒரு சிறு பகுதியாகவும், உலக மக்கள் தொகையில் ஒரு சிறு தொகையாகவும் உள்ள தமிழ்த் தேசிய இன மக்களின் அல்லது தமிழக மக்களின் விடுதலையைப் பற்றிச் சிந்திப்பதும அதற்காகச் செயல்படுவதும் மாந்த இன விடுதலையின் ஒரு பகுதியேயாகும். மெய்ம்மத்தை(தத்துவத்தை)ப் படிப்படியாகச் செயலாக்குவதற்கான நடைமுறை உத்தியேயாகும் பகுதியிலிருந்துதான் முழுமையை நோக்கிச் செல்ல முடியும்.

உலகப் பாட்டாளி மக்களின் முன்னேற்றத்திற்கான—விடுதலைக்கான, மார்க்சிய—இலெனினிய இயங்கியல் மெய்ம்மத்தை, முதலாளிய வகுப்பு இயங்காவியல் நிலைக்குக் கொண்டு வந்ததின் விளைவே, குமுக மாற்றத்தின் படிநிலை வளர்ச்சியின் இடைநிலைக்கட்டமான மொழித் தேசிய இன விடுதலைப் போராட்டங்கள் சரியான திசையில் செல்லாமல் உலக முதலாளிய ஆற்றல்களும் அந்தந்தத் தேசிய இன அதிகாரத் தரகு முதலாளிகளும தங்களுக்குத் தகுந்தவாறு திசை திருப்புவதற்கு ஏதுவாகி விட்டது. இதிலிருந்து பாடங் கற்றுக்கொண்டு, இந்தியாவில் இத் தேசிய இனங்களின் விடுதலையைப் பாட்டாளி மக்கள் கையில் எடுப்பதற்கும், அதற்கான போராட்டங்களுக்கு இப் பாட்டாளி வகுப்பு தலைமையேற்பதற்கும், தடையாக உள்ள பல்வேறு கருத்து முரண்பாடுகளை நீக்கிச் செயலை விரைவாக்குவதற்கான சூழலையும் உருவாக்க வேண்டும்.

இந்திய—பார்ப்பனிய—தரகு முதலாளிய அரசியல் கட்டமைப்பிலுள்ள பல்வேறு முரண்பாடுகளிலிருந்து, **தமிழ்த் தேசிய இன விடுதலை** அல்லது **தமிழக மக்கள் விடுதலை** என்ற முரண்பாடு எங்ஙனம் முதன்மை முரண்பாடாக கூர்மையடைகிறது என்பதையும், அதற்கான அகநிலை மற்றும் புறநிலைக் காரணிகள் எவ்வாறு நம்மை முன்னேக்கிச் செலுத்துகின்றன என்பதையும் படிப்படியாக விளக்குவோம்.

1. அகநிலைக் காரணிகள்:

அ மொழி. இன முரண்பாடு:

முதலில் ஒருவன் பேசுகின்ற மொழி இன்னொருவனுக்குப் புரியவில்லை. உடனே அவர்களுக்குள் மாந்தன் என்ற உறவும் இணைப்பும் இருந்தாலும், ஓர் உளவியல் வழியான தடையும் பிரிவும் உருவாகி விடுகின்றது. அவ்வாறே ஒருவன் பேசுகின்ற மொழி இன்னொருவனுக்குப் புரியும்போது, அவர்களுக்குள் வேறு வகையில் பிரிவும் பிணக்கும் இருந்தாலும், உளவியல் வழியான ஓர் உறவு ஏற்பட்டு விடுகின்றது. *இந்த மொழியியல் உறவுகளே இனவியல் உறவுகளாக வளர்ச்சியடைந்து, தேசிய இனச் சிந்தனைகளாக—இதன் வளர்ச்சிக்குரிய தடைகளை உடைத்தெறிந்து—தேசிய இன விடுதலைப் போராட்டங்களாக உலகம் முழுதும் தொடர்கின்றன.* இதுவே ஒரு தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்தின் அகநிலைக் காரணிகளில் முதன்மையாக இருக்கின்றது குமுக அமைப்பிலுள்ள பல்வேறு முரண்பாடுகளான சாதி, மதவியற் கோட்பாடு, தொழில், பொருளியல் ஏற்றத் தாழ்வுகள் எல்லாம் மொழி சார்ந்த இனவியல் முரண்பாட்டுக்குள் அடக்கமாகிக் காலச் சூழலுக்கேற்ப தேசிய இன முரண்பாடாக முன்னுக்கு வருகின்றது. குமுக அமைப்பிலுள்ள படிநிலை வளர்ச்சிக் கூறுகளை 'முரண்பாடுகளாக' முறைப் படுத்தி, அக் குமுக வளர்ச்சிக்குரிய தீர்வாக முதன்மை முரண்பாடுகளைக் கண்டறிந்து, படிப்படியாக ஒவ்வொரு முரண்பாடாகத் தீர்க்க வேண்டுமென்று புதிய வழியைக் காட்டியவர் மக்கள் தலைவர் *மாவோ* அவர்கள். இந்தியாவின் பண்டைய வரலாற்றிலிருந்தும் தமிழக மக்கள் விடுதலைக்கான போராட்டங்களின் பட்டறிவிலிருந்தும் நடைமுறையில் உலகில் நடக்கும் தேசிய இனங்களின் போராட்டங்களிலிருந்தும், *இந்தியாவில் முதன்மை முரண்பாடாக இருப்பது மொழித் தேசிய இன முரண்பாடே* என்பதில் நாம் தெளிவடைய வேண்டும். மற்ற மொழித் தேசிய இனங்களைவிட தமிழ் தேசிய

இனத்தின் விடுதலைக்கான தேவையும் காலச் சூழலும் மிகுதியாகும். ஏனெனில் பண்பட்ட மொழியையும் இலக்கிய இலக்கணங்களையும் உலகந் தழுவிய மாந்த நேயப் பண்பாடுகளையும் கொண்டு வளர்ந்த இனம், இன்று எல்லா நிலையிலும் தன் சொந்தத் தாயகத்திலேயே கூனிக் குறுகி அடிமையாகக் கிடப்பது உரிமையுணர்ச்சியுள்ள ஒவ்வொரு தமிழன் உள்ளத்தையும் உறுத்தாமல் இருக்க முடியாது.

ஆ. சாதி முரண்பாடு :

இந்திய அளவில் குமுக அமைப்பிற்குள் முதன்மை முரண்பாடாக மொழித் தேசிய இன முரண்பாடு இருப்பது போல், தமிழக அளவில் இனத்திற்குள் முதன்மை முரண்பாடாக இருப்பது 'சாதி' முரண்பாடேயாகும். பல்வேறு சாதிக் குழுக்கள் இணைந்தே ஒரு மொழித் தேசிய இனமாக உருவாகிறது. இவ்வகையில் தமிழக மக்கள் எண்ணற்ற சாதிகளைக் கொண்டு இயங்கினாலும், நம்மை ஒன்றாக—வலுவாக இணைப்பது தமிழ் மொழியேயாகும்.

மக்கள் உயிர்வாழ்வதும் இயங்குவதும் அவர்களின் உழைப்பாலும், உழைப்பால் உருவாகின்ற உருவாக்க(உற்பத்தி)ப் பொருள்களாலுமேயாகும். இந்தப் பொருள் உருவாக்கத்திலும் மற்ற தேவைகளின் உருவாக்கத்திலும் அடித்தளத்தில் இருந்து முழுமையாக ஈடுபடுவது தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களும் பிற்படுத்தப்பட்ட தமிழ் மக்களுமேயாகும். அதிலும் அதிகமாக உடல் உழைப்பில் அழுத்தப்படுவது தாழ்த்தப்பட்ட தமிழ் மக்களேயாவர். யாருக்குச் சுமை அதிகமோ அவர்களே முதலில் சுமையைத் தூக்கி எரிவதற்கு முன்னணியில் வர வேண்டும். ஆகவே, தமிழ்த் தேசிய இன முரண்பாட்டைத் தீர்ப்பதில் முன்னணியிலும் தலைமையிலும் இருக்க வேண்டியவர்கள், குமுக நிலையிலும் பொருளியல் நிலையிலும் பின்தங்கியுள்ள தாழ்த்தப்பட்ட தமிழர்களேயாவர். இதை இந்திய அளவிலோ தமிழக அளவிலே உள்ள குமுகப் படிநிலை அமைப்பையும் சிக்கல்களையும் அதற்கான தீர்வையும் உணர்ந்தவர்கள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டிய குமுக இயங்கியல் உண்மையாகும். இதற்கு மாறாகச் சிந்திப்பவர்கள் எல்லாம் குமுக மாற்றத்தை முழுமையாக விரும்பாதவர்கள் என்று நாம் வரையறை செய்து கொள்ள வேண்டும்.

அடித்தளத்துத் தாழ்த்தப்பட்ட தமிழர்கள் மனம் விரும்பி ஏற்றுக்கொள்ளாத எந்த ஓர் இயக்கமும் மாற்றமும் முழுமையடைய முடியாது. இது வரை அடைந்த குமுக மாற்றம் அனைத்தும் மேலோட்டமான சீர்திருத்த அளவிலேயே நடந்தது. இதற்குக் காரணியம் நிலவுடைமைக் கால கட்டத்திலிருந்து இன்றைய முதலாளியக் கால கட்டம் வரை, எந்த ஓர் அரசியல் அமைப்பையும் ஆரியப் பார்ப்பனியமும் மேல் சாதியமும் தங்கள் கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தது. இதனாலேயே இங்கு விரைந்த குமுகப் புரட்சி ஏற்படவில்லை. இந்த சாதிப் பிரிவுகளின் வரலாற்று உண்மைகளை இன்றைய ஆரியப் பார்ப்பனிய முதலாளிய மறைப்புகளிலிருந்து வெளிக் கொணர்ந்து மக்களுக்குக் காட்ட வேண்டும். இந்தச் சாதி முரண்பாடுகளைப் பயன்படுத்தியே ஆரியப் பார்ப்பனர்களும் மற்ற மேல்சாதியரும் தொடர்ந்து மக்களைப பகடைக் காய்களாகப் பயன் படுத்துகின்றனர். அதே முரண்பாட்டை நாம் சரியாகப் புரிந்து கொண்டு கையாண்டால் நம் தமிழக மக்கள் விடுதலைக்குப் பயன்படுத்தலாம். முள்ளை முள்ளால்தான் எடுக்க முடியும்.

நடை முறையில் மக்கள் அணி சேர்தல்:

இன்று ஒரு சிற்றூர் அளவிலோ அல்லது ஒரு வட்டார, மாவட்ட அளவிலோ போலியான குடியாட்சித் தேர்தல்களில் கூட மக்கள் அணி சேர்வதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒரு சிற்றூரில் சாதி நிலையிலும் பொருளியல் நிலையிலும் வல்லாண்மை செலுத்துகின்ற ஒருவரை அல்லது ஒரு சிலரை எதிர்ப்பதற்கு இவற்றில் பின்தங்கியுள்ள மற்ற பிரிவினர் ஒன்றிணைவதை நோக்க வேண்டும். இவ்வாறே ஒரு வட்டார அளவிலும் மாவட்ட அளவிலும் குமுக நிலையில் மற்றவர்களை ஒடுக்கியும் பொருளியல் நிலையில் சுரண்டியும் வாழ்பவர்களை எதிர்த்து மற்ற பின்தங்கிய சாதியினர் அணி சேர்வதை நடைமுறையில் காணலாம். இவ்வாறே தேசிய இன முரண்பாட்டைத் தீர்ப்பதற்கும் அடித்தளத்துச் சாதிகள் விடுதலை பெறுவதற்கும் வல்லாண்மை செலுத்துகின்ற சிறுபான்மைச் சாதிகளை எதிர்த்து மற்ற ஒடுக்கு முறைக்குட்படுகின்ற பெரும்பாண்மைச் சாதிகள் அணி சேரவேண்டும்.

இ. பண்பாட்டு முரண்பாடு :

மக்கள் சேர்ந்து உடல் உழைப்பிலும் பொருள் உருவாக்கத்திலும் ஈடுபடும்போது உழைப்பாலும் மொழியாலும் ஒன்றுகின்றனர். காலத்திற்கும் இடத்திற்கும் செய்கின்ற தொழிலுக்கும் ஏற்றவாறு தனித் தனியான கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளை—குமுக ஒழுக்கங்களை— வளர்க்கின்றனர். இவையெல்லாம் சேர்ந்து பொதுவான மொழித் தேசிய இனத்தின் பண்பாடாக மலர்ச்சியுறுகின்றது. ஒரு தேசிய இனத்தின் பொதுவான பண்பாடு, இன்னோர் இனத்தின் பண்பாட்டுத் தாக்கத்திற்குள்ளாகும்போது, அந்நிலையில் இதுவும் தேசிய இன முரண்பாடுகளில் ஒரு கூறாக வெளிப்படுகிறது. அவ்வகையில் தமிழினத்தின் பொதுவான பண்பாடு தொடக்கத்தில் ஆரியப் பார்ப்பனர்களாலும், ஐரோப்பிய இனங்களாலும் மற்ற இந்தியாவில் உள்ள வெவ்வேறு இனங்களாலும் சிதைக்கப்பட்டுத் தன் தனித்தன்மையை இழந்து நிற்பதை

Scanned with CamScanner

இதைப் பற்றிச் சிந்திக்கின்ற தமிழர் யாவரும் உணர்வர்.

ஈ. மதவியல் முரண்பாடு:

தமிழகத்தில் மக்களின் மதவியல் கோட்பாடுகள் வெவ்வேறாக இருந்தாலும், சாதிப் பிரிவினையைப் போல் அதிக முரண்பாடுகளை உருவாக்குவதில்லை: ஆரியப் பார்ப்பனர்களும் மற்ற மேல் சாதியர் சிலரும் மேலாண்மை செலுத்துவதற்காகத் திட்டமிட்டே இந்து மதம் என்ற போர்வையில் பல்வேறு பெயர்களைக் கொண்ட இயக்கங்களை நடத்தியும், இசுலாம், கிறித்தவ மதவியல் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்ற தமிழ் மக்களை எதிரியாகக் காட்டியும், அதன்மூலம் கலவரங்களை உண்டாக்கி வருகின்றனர். இன்று இந்திய அரசு என்பது பார்ப்பனிய மற்றும் மேல் சாதியக் கட்டமைப்பில் இருப்பதால், தமிழ்த் தேசிய இன முரண்பாட்டைக் கூர்மைப்படுத்துவதற்குச் சிறுபான்மை மதக் கோட்பாடுகளைக் கடைபிடிக்கின்ற கிறித்தவ மற்றும் இசுலாமியத் தமிழர்கள் மற்ற தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட தமிழர்களோடு இணைந்தே செயல்படுவர். குமுக இயங்கியல்படி சேர்ந்தே செயலாற்ற வேண்டும். இவ்வாறே மொழிவழிச் சிறுபான்மையரும் தங்கள் வாழ்வுரிமையைக் காத்துக் கொள்ள அடித்தளப் பாட்டாளி மக்களின் போராட்டத்தோடு தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும்.

புறநிலைக் காரணிக;

அ. பொருளியல் முரண்பாடு:

தமிழ்நாட்டில் தமிழ்த் தேசிய இன மக்களின் உடல் உழைப்பால் விளைகின்ற பல்வேறு வேளாண்மைப் பொருள்களான நெல், சருக்கரை, கடலை, தேங்காய், பருத்தி மற்றும் மலைத் தோட்டப் பயிர்களான தேயிலை, காப்பி, மிளகு, ஏலம் போன்ற பொருள்கள் உருவாக்கம் செய்த மக்களுக்குப் போதிய அளவு கிடைப்பதில்லை. இந்திய ஒருமைப்பாடு என்ற பெயரில் வட இந்தியத் தரகு முதலாளிகளும் தமிழ்த் தேசிய இனத்தைச் சேர்ந்த சிறு தரகு முதலாளிகளும் இவற்றைப் பன்னாட்டு முதலாளிகளுக்கு மிகக் குறைந்த விலைக்கு விற்றுவிட்டு, அங்கிருந்து நம்மை ஒடுக்குவதற்கான கருவிகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இவ்வாறே இயற்கைக் கனிவளங்களான இரும்பு, நிலக்கரி, எண்ணெய் போன்றவை வட இந்திய முதலாளிகளால் தொடர்ந்து சுரண்டப்படுகின்றன. இச்சுரண்டல் மக்களுக்குத் தெரியாதவாறு இங்குள்ள அடிமைத் தமிழக அரசுகளால் மறைக்கப்படுகிறது.

ஆ. அரசியல் முரண்பாடு:

ஒரு தேசிய இனத்தின் பல்வேறு கூறுகளை உள்ளீடாகச் சிறுக்கப்படுத்திப் புற நிலையாக வெளிப்படுத்திக் காட்டுவது அரசியல் அதிகாரமே யாகும். தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் முரண்பாடு இதுவரை கூர்மையடையாமல் இருந்ததற்கும் தொடர்ந்து திசை மாற்றப் பட்டதற்கும் காரணம் தமிழ்த் தேசிய இனச் சிந்தனை சிறிதும் இல்லாத மிகச் சிறுபான்மையாகவுள்ள பார்ப்பனர்களும் மற்ற மேல் சாதியருமே அரசியல் அதிகார வகுப்பு நிலையில் வல்லாண்மை செலுத்தியதேயாகும். குமுக முரண்பாட்டுக்குள்ளேயே தமிழினம் சிக்கிக் கொண்டிருப்பதால் இவற்றுக்கான மூல காரணங்களையும் புறநிலைக் காரணங்களையும் தெளிவாக்கிக் கொள்ளவில்லை. அரசியல் நிலையில் முரண்பாடுகள் முற்றியிருந்தும், தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கான காரணிகள் தெளிவாக வெளியிட்ட பிறகும், இந்திய அளவிலும் தமிழக அளவிலும் இயங்கும் தமிழினத்தின் எதிரிகளும் இரண்டகர்களும் தங்கள் வகுப்பு நலன்களைக் காத்துக் கொள்ள எத்தனை வகையான அரசியல் வடிவங்களைப் புனைகின்றனர் என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். இன்று தமிழ்த் தேசிய இன உரிமை உணர்வுகள் ஒரு சிறிய அளவில் வெளியிடப்பட்டாலும் அதை ஒடுக்குவதற்கு ஆளும் கட்சியும் எதிர்க் கட்சியும் எவ்வாறு முனைப்புக் காட்டுகின்றன என்பதை தமிழ்த் தேசிய இன உணர்வாளர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இ தமிழினத்திற்கு ஏற்பட்டுள்ள புறநிலைத் தாக்கங்கள்:

தமிழ் ஈழத்தில் தொடர்கின்ற தமிழினப் படுகொலை, இந்தியாவில் மற்ற மாநிலங்களில் தமிழின மக்களுக்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் அனைத்தும், இதுவரை அடிமைத் துயில்கொண்டிருந்த தமிழக மக்களைத் தட்டி எழுப்புவதற்கும் தமிழினத்தின் உரிமையை மீட்பதற்கும் தமிழ்த் தேசிய இனம் போராடியே ஆக வேண்டும் என்னும் உண்மையை உணர்த்துவனவாகும். மக்களின் உணர்வுகளோடு ஒரு சிறிதும் ஒட்டாத போலிப் பொதுவுடைமையர் தமிழின மக்களுக்குப் பல்வேறு இடங்களில் ஏற்படுகின்ற தாக்கங்களைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. புரட்சியைப் பற்றிப் பேசுகின்ற போலிப் பொதுவுடைமையர் தீர்க்க முடியாத சிக்கல்களைப் பேச்சுரை (வார்த்தை) மூலம் தீர்வு காண வேண்டுமென்கின்றனர்.

முடிவுரை: தமிழ்த் தேசிய இனத்தின் அல்லது தமிழக மக்களின் விடுதலையை உலகப் பாட்டாளி மக்களின் விடுதலையின் ஒரு பகுதியாக நாம் மாற்றுவதற்கு முயல வேண்டும். தமிழகத்தில் குமுக நிலையில் அடித்தள சாதிகளும் தொழில் நிலையில் பாட்டாளி வகுப்பும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்திருப்பதாலும் தாழ்த்தப்பட்ட தமிழர்களும் முதலில் ஒன்றிணைந்து தமிழ்த் தேசிய

Scanned with CamScanner

தொடர்: 5

இனம் மீண்டும் எழுகிறது!

வெங்காலூர்-- 'குணா'

தமிழ்நாட்டிலுள்ள தமிழரல்லாத 'முற்போக்குகள்' சிலரும் கூட தேசிய இனச் சிக்கலைப் பற்றிப் பேச வேண்டிய கட்டாயத்திற்கு ஆட்பட்டுள்ளனர். அவ்வாறு பேசி வருகிற விரல்விட்டு எண்ணக் கூடியவர்களும் தமிழகத்திலுள்ள தமிழரல்லாத "தேசியச் சிறுபான்மை"யரைப் பற்றி மட்டுமே அழுத்தம் கொடுத்துப் பேசுகின்றனர்! தமிழகத்திலுள்ள தமிழரல்லாதார் எல்லாம் ஏதோ ஒரு பெரிய இனத் தாக்குதலுக்கு ஆட்பட்டு அவர்களுடைய வருங்காலமே அச்சுறுத்தப்படுவது போன்ற மாயையை அவர்கள் உருவாக்கப் பார்க்கின்றனர். தமிழினம் விழித்துக் கொண்டால் தங்களின் இன வழிச் சுரண்டலுக்கு என்ன ஆகுமோ என்ற குலை நடுக்கமும் பதற்றமும்தாம் இதற்குக் காரணமாக உள்ளது.

உருசிய மாதிரியை மனப்பாடம் செய்து வைத்துக் கொண்டு சொல் அளவு குறையாமல் பொருள் அளவு குறையாமல் அந்த உருசியப் பாணியில் "தேசிய இனச் சிக்கலைப் பற்றிய வாய்பாடுகளை ஒப்புவிப்பதற்கு அப்பால் போக வல்ல துணிவும் அறிவு நாணயமும் தெளிவும் நேர்மையும் நம்முடைய "முற்போக்கு"களுக்கு இல்லை. இவர்களுக்குத் தலைமை தாங்கி வருகின்ற தமிழரல்லாதோரிடம் இலை மறை காயாக உள்ள இனப் பற்றே இதற்குக் காரணம். அதனால்தான் இந்த "முற்போக்குகள்" எல்லாம் "தமிழக விடுதலை" எனச் சொல்லி நாணயமாகப் பேச மாட்டார்கள்' "தேசிய இனச் சிக்கலைப்" பற்றி மட்டுமே கதைப்பார்கள்.

இரண்டாம் போருக்குப் பின்னர் நேட்டோ அணி நாடுகள் என்றும் வார்சா அணி நாடுகள் என்றும் இரண்டு பெரும் போர் முட்டப் படை அணிகளாக உலகம் கூறுபட்டது. முதலாளிய உலகத்திற்கும், ஒப்புரவு (சோசலிச) உலகிற்கும் இடையில் நிலவி வந்த தீராப்பகை ஏற்படுத்திய பனிப்போர் தான் அதுவெனக் கருதி நாமும் கட்சி கட்டினோம். பின்னர் உருசியாவில் குருஃச்சேவ் வந்தார்! முதலாளிய உலகமும் ஒப்புரவு உலகமும் "அமைதியாக ஒத்து வாழலாமே" (Peaceful co- Existence) என ஒரு பெரிய போடு போட்டார். நாமும் குழம்பினோம். இதற்கிடையில் "நேட்டோ அணியிலும் சேர மாட்டோம், வார்சா அணியிலும் சேரமாட்டோம்" என்று சொல்லிக் கொண்ட அணிசேரா "நடுநிலை" நாடுகள் வேறு தனிக் கடையை விரித்தன. "முதலாளியத்திற்கு எதிர்ப்பான வேலிகளை உடைத்தெறிவோம்" (glasnost) "முதலாளியத்தை மீட்போம்! (Perestroika) எனக் கூறிக்கொண்டே இன்று பிறந்த மேனியாய்த் தெருவுக்கு வந்துவிட்டார் நம்முடைய கோர்பச்சேவ்! அமெரிக்க முதலாளியத்தை மணந்து கொண்ட டெங்சியோபிங்கோ சீனாவில் முதலாளியத்தை ஒரே மூச்சில் மீட்கப் போய் இக்கட்டில் மாட்டிக்கொண்டு விட்டார்! இந்த நிலையில், முதலாளியத்திற்கும் பொதுவுடைமைக்கும் இடையிலான முரண்பாடு என்பது அமெரிக்க முற்றுரிமைக்கும் உருசிய முற்றுரிமைக்கும் இடையிலான ஒரு முரண்பாடாக வெளிப்பட்டுள்ளது என்னும் பழைய பாட்டுகள் எல்லாம் பொருளற்றுப் போய் விட்டன. அமெரிக்கச் சார்பு என்பதும், 'உருசியச் சார்பு என்பதும், சீனச் சார்பு என்பதும் செல்லாக் காசுகளாக மாறிவிட்டன. போதாமைக்கு கோர்பச்சோவும் ஃசியார் ஃச்புஃமும் என ஒருபுறமும் கோர்பச்சேவும், டெங்சியோபிங்கும் என மறுபுறமும் இரு வேறு தேனிலவுகள் நடந்தேறி வருகின்றன! இந்நிலையில் "நடுநிலை நாடுகள்" என்பதற்கோ 'அணி சேராமை" என்பதற்கோ என்னதான் பொருள் சொல்வது? இந்த மாற்றங்களை எல்லாம் விளங்கிக் கொள்ள இந்த "முற்போக்கு"களுக்கு எத்தனைக் காலமாகுமோ தெரியவில்லை!

(முன் பக்கத் தொடர்ச்சி)

இன உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். பாட்டாளியச் சிந்தனையாளர்கள் தலைமையேற்கும்போது மக்கள் போராட்டம் சாதி வெறிக்கும் இனவெறிக்கும் மதவெறிக்கும் உட்படாமல் சரியான திசையில் செல்ல முடியும். தமிழினத்திற்கு இவ்வளவு தாக்கங்கள் ஏற்பட்ட பிறகும் மேல் சாதியர் எந்த வகை அசைவும் இல்லாமல் இருக்கின்றனர். இலவு காத்த கிளியாக நாம் இன்னும் இவர்களை நம்பி இருக்க முடியாது. தமிழ்த் தேசிய இன உரிமையோடு இணைபவர்கள் இணையட்டும். காலமே அவர்களை யார் என்பதை அடையாளம் காட்டும். தமிழகத்தில் வாழ்கின்ற மொழி வழி மற்றும் மதவழிச் சிறுபான்மையரின் உரிமைகளைக் காத்தும் அவர்களை நம் தமிழ்த் தேசிய இனப் போராட்டத்தோடு இணைத்தும் நாம் முன்னேறிச் செல்ல முடியும்.

தமிழ்த் தேசிய இன உரிமைப் போராட்டம் வெல்க! உலகியம் வளர, தமிழியம் மலர்க!

—க. கண்ணன். அறி.இ, கரடிப்பட்டி.

அமெரிக்கா அன்று அணுகுண்டைப் போட்டு சப்பானை அடக்கியது. கொரியாவோ சப்பானுக்கு அரையடிமை நாடாக இருந்து வந்தது. கொரியாவின் தென் பகுதியை ஒரு தனி நாடாக்கிய அமெரிக்கா அதைத் தன்னுடைய புத்தடிமை நாடாகச் (New Colony) செய்து கொண்டது. அந்த சப்பானும் தென் கொரியாவும் சுறுசுறுப்பாக வளர்த்த அங்காடிப் பொருளியல் பூதமென வளர்ந்து போயுள்ளது. தத்தம் பண்டங்களைப் படமெடுக்க விட்டுவிட்டு, ஆண்ட அமெரிக்காவையே அடிமைப்படுத்தியுள்ள ஆசியாவின் பொருளியல் வல்லரசுகளாக அவ்விரண்டு நாடுகளும் தலையெடுத்துள்ளன! இந்த இடர் அமெரிக்காவிற்கு ஏற்பட்டது ஏன் தெரியுமா? இரண்டாம் உலகப் போருக்குப் பிந்திய அமெரிக்காவும் உருசியாவும் படைப் பெருக்கப் போட்டியில் முழு மூச்சாக இறங்கின. அணுகுண்டுகளையும் அணுக்கருக் குண்டுகளையும் புத்தம் புதிய போர்க் கருவிகளையும் தளவாடங்களையும் ஆக்குவதில் வெறித்தனமான அக்கறையையும் ஈடுபாட்டையும் காட்டின. படைத் துறைக்குக் கோடி கோடியாகச் செலவிட்ட இந்த இரண்டு பெரிய வல்லரசுகளும், தத்தம் நாட்டு நுகர் பண்டத் தொழிலை மறந்தன. இதனால் யப்பானியப் பண்டங்களும் தென் கொரியப் பண்டங்களும் செருமானியப் பண்டங்களும் அமெரிக்க அங்காடியைக் கைப்பற்றிக் கொண்டன. அரண்டுபோன அமெரிக்கா சுங்கச் சுவர்களை எழுப்பிப் பார்த்தது. பயனில்லை. நுகர் பொருள் விளைப்பிலும் வேளாண்மை விளைப்பிலும் என்றுமே உருப்படாத உருசியாவிற்குப் படைக் குறைப்புதான் ஒரே வழியாகப் பட்டது. தங்களுக்குள் வெறிபிடித்த படைத் துறை ஆக்கப் போட்டி நீடித்தால் குடியே மூழ்கி விடும் என்னும் அறிவு இந்த அரக்க வல்லரசுகளுக்குக் காலம் தாழ்ந்துதான் விளங்கியது. இதனால் வந்த விளைதான் அந்தத் "திறந்த போக்கும்" (glasnost)பொருளியல் சரிக்கட்டலும் (Perestroika)போன்ற தம்பட்டங்களாகும்.

உலகளவிலான இத்தனை மாற்றங்களும் நம்முடைய முற்போக்கு எடுபிடிகளுக்கும் ஏனோ தானோக்களுக்கும் சோற்றாலடித்த பிண்டங்களுக்கும் அறவே விளங்காது. எதையும் சரிவரப் புரிந்து கொள்ளாமல் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் படித்த "முற்றாளுமை" என்னும் உப்பு, கடுகு, மீன், கருவாடு எண்ணெய் தவிர்க்க வேண்டிய ஓர் ஆளுமையைப் பற்றித்தான் அந்த மரமண்டைகள் இன்னும் ஒப்புவித்து வருகின்றன. இந்தி(ய)ப் பேரரசு இன்று ஒரு வட்டகை வல்லரசாக (Regional Imperialism) வளர்ந்துள்ளது. அமெரிக்கா, உருசியப் பெரும் வல்லரசுகளால் தெற்கு ஆசியாவில் கோயில் மாடு போல் வளர்ந்து விடப்பட்டுள்ள இந்த இந்தி—இந்து வல்லரசு ஒரு "பேட்டைக் காடையனா"கத் திரிந்து வருகின்றது. இதையெல்லாம் இந்த முற்போக்குகள் கண்டும் காணாமல் போய்விடுவர்! இதுதானே "குமுக வல்லரசியம்" (Social Imperialism) என்பது?

தமிழக விடுதலைக் கொள்கையும் அதை ஆற்றுப்படுத்த வல்ல செயல் வீரமும் தான் இன்றைய வரலாற்றுத் தேவை என்பதை இன ஓர்மை கொண்ட தமிழ் இளைஞர்கள் இன்று உணர்ந்து வருகின்ற சூழ்நிலையில் நாம் கண்கூடாகக் கண்டு வரும் அன்றாட நடப்புகளுக்கு ஒரு தெரிவியல் (Theorencal) விளக்கம் தருகின்ற முயற்சிதான் இக்கட்டுரையாகும். இந்த நடப்பு உண்மைகளை எல்லாம் அடாவடியாக மறுப்பவர்களை முதலில் அவர்கள் தமிழர்கள்தாம் என மெல்லக் கீறிப் பார்த்து விளங்கிகொள்வது நல்லது. தமிழின ஓர்மை கொண்ட இளைஞர்கள் இதை உரைகல்லாகக் கொண்டால் போதும். அடுத்து மாலிக்காஃபூரைப் படையெடுக்கக் கூட்டி வந்த சுந்தரபாண்டியன் விசய நகர வல்லரசாளர்களை அழைத்து வந்த சந்திரசேகரப் பாண்டியன் போன்றோரின் வழி வந்த தமிழரில் கயவரைக் கணக்கிலெடுத்துக் கொள்ளத்தான் வேண்டும். இந்த அழற்புகு தேர்வில் வென்று விட்டால் தமிழ் தேசிய ஓர்மையை ஒரு தேசிய விடுதலைப் போராக வடிக்க வல்ல போர்க்களப் பாட்டும் ஏர்க்களப் பாட்டும் பிறந்து விடும். O

இறுதியில் தாங்கள் காட்டுகின்ற திசை நோக்கியே வரவேண்டியிருக்கிறது!

பேரன்புடையீர், வணக்கம்.

ஒவ்வொரு நாளும் இங்குள்ள குமுகச் சிக்கலில் பட்டறிவைப் பெறும்போதுதான், தங்களின் தெளிந்த தமிழினவியற் கொள்கை எங்களுக்குப் புரிகின்றது. ஒவ்வொருவரும் வாழ்கின்ற சூழ்நிலைக்கு ஏற்பவும் அரைகுறை அளவிற்கு ஏற்பவும் பல்வேறு கருத்து மயக்கங்களிலும், வெவ்வேறு திசைகளில் முட்டி மோதி, இறுதியில் தாங்கள் காட்டுகின்ற திசை நோக்கியே வரவேண்டியிருக்கிறது.

பல்வேறு இயக்கங்களில் இயங்குகின்ற இளைஞர்களுக்கு, இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில—எப்படியாவது தமிழ்த் தேசிய இன உணர்வையும் தமிழ்த் தேசிய இன விடுதலையின் தேவையையும் விளங்க வைக்க வேண்டுமென்ற நோக்கத்திலேயே சில கட்டுரைகளை அனுப்பியுள்ளேன்.

அன்புடன்

—க. கண்ணன், கரடிப்பட்டி.

உ.த.மு.க. கொள்கை விளக்கம்-I

பறம்பை அறிவன்

தூய்மையான் தமிழ்மொழி முன்னேற்றம்.

தூய்மை, நேர்மை, உண்மையைக் கண்டு அஞ்சுகின்ற உலகம். "கையூட்டு வாங்காமலிருக்கலாம்; கொடுக்காமல் இருத்தல் இயலாது" என்று ஒருமுறை இந்திய விடுதலைப் போராட்ட வீரர், செயப்பிரகாச நாராயணன் கூறினார். 'கையூட்டு வாங்குவது மட்டுமின்றிக் கொடுப்பதும் குற்றம்' என்பதை நாம் அனைவரும் அறிவோம்,

ஒரு பெரியவர் கூறினார், "நாம் சிவனியத்தைப் பின்பற்றுவோம்; ஆரியப் பொய்ம்மதம் தானே கெடும்" என்று. 'நம் அளவில் நாம் தூய்மையாக இருப்போம்' என்று கூறுகின்ற 'நல்ல உள்ளங்களை'க் காண முடிகிறது.

'தூய்மை' பற்றிய கருத்தியல் சொல்லளவிலும், தன்னளவிலும் ஏற்றுக் கொள்கின்றவர், நடைமுறையில், 'இவ்வளவுதான் முடிகிறது. என்று கூறுகின்றவரும் உண்டு.

'அவரே, அப்படி என்றால், நம்மால் எப்படி முடியும்? என்று முந்திய தலைமுறைமேல் பழிபோட்டு விட்டுத் தம் வழி போகின்றவர்களையும் காண்கின்றோம்! மேலும், 'தூய்மை', ஓர் அடிப்படையில் (Fundamentalism) என்று புறக்கணிப்புக்காளாகின்றது. அஃதன்றித் 'தூய்மையாளர்' 'தீவிரர்' என்றும் பழிக்கப்படுகின்றனர். 'தீவிர வேளாண்மை' வேண்டும். ஆனால், தீவிரக் கொள்கை கூடாது. ஏன்? தன்னலம் காரணமாகத் 'தப்புத்தாளம்' போடும் கும்பலுக்கே, 'தாராளத்தன்மை'யுடையவர்க்கே, காலம் என்றாகி விட்டது. எனவே, 'தீவிரம்' 'தவறு' என்றாகி விட்டது!

தூய்மை என்பது, சோர்வின்மை, விடாமுயற்சி, தெளிவான கண்ணோட்டம், பற்றுறுதி யாகிய பண்புகளுக்குக் காரணமானதென்பதை மறந்து விடுதல் கூடாது. இப் பண்புகள் ஒருவனை ஈகவானாக்கி உயர்த்தும்! இஃதிவ்வாறாகத் 'தூய தமிழ்மொழி' என்பது குறித்த சிந்தனைப் போக்குகளை நாம் எண்ணியறிதல் வேண்டும். தமிழ் என்றாலே போதும்; தூயதமிழ், நல்லதமிழ் என்றெல்லாம் கூறுவதேன் என்று கேட்கின்றனர்? 'பெரியார் தாசன்' என்ன சொல்கிறார்? 'எனக்கு தெரிந்ததெல்லாம் தமிழ்! நல்லதமிழ், கெட்ட தமிழ் என்றெல்லாம் இல்லை' என்கிறார் அவர். இது வரலாற்றினையும், குமுகவிடலையும் ஆராயாமல் கூறுவதாகும்! ஏனெனில், மொழி'யை ஒரு கருவி என்ற அளவில் காண்கின்ற குறுகிய சிந்தனை இத்தகைய முடிவுக்கு வரக் காரணமாகி விடுகின்றது.

மாந்தனை மற்ற விலங்கினின்றும் பிரிக்கின்ற மொழி பற்றிய கருத்தியல் கருவி ஆகாது. ஒரு கருவி தானே மாற்றமடைந்து புதிய கருவியாக வடிவங் கொள்வதில்லை. தமிழின வளர்ச்சி. சிதைவு மாற்றங்கள் மாந்தனின் வளர்ச்சி சிதைவு, மாற்றங்களுக்கு ஏற்ப உண்டாவன. இவ்வாறிருக்க மொழியைக் கருவி எனக் கூறுதல் தகாதது ஆகும்!

கருவியையும் மாந்தனையும் பிரித்து விடலாம். சிந்தனைக்கு ஊற்றுக் காலான மொழியையும் மாந்தனையும் அவ்வாறு பிரித்துவிட முடியாது.

மொழி என்பதன் பண்பு, தாய்மொழி என்கிறபோது அதற்குள்ள தனித்தன்மையோ பெருஞ் சிறப்புடையதாகும்.

பாரதியார், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்" என்றார். தமிழ் அவர்தம் தாய்மொழியாகையால் கூறினார் என்பது தவறு. தமிழின் உயர்வினை அறிந்தமையாலேயே அவ்வாறு பாடினார். வினோபா அடிகள் 'பாரதி' தாய்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்' என்று பாடியிருக்க வேண்டும் என்கிறார். அவர் தமிழின் மேன்மையை மறுக்கும் உள்நோக்கம் கொண்டவர் எனலாம். காரணம், அவர் 'இந்தி— இந்தியாவை' நோக்கமாகக் கொண்டவர். இவ்வடிகள், 'பொது நோக்கினர்' போல, வரலாற்றில், பாரதியின் இடத்தைக் 'குறைத்து மதிப்பிடவும்' பார்க்கிறார்.

தமிழை இரண்டாமிடத்தில் வைக்க முயன்ற தமிழகத்துப் பார்ப்பனக் கும்பலில்' வேறுபட்டு வாழ்ந்த பாரதியை நாம் வரலாற்றில் உரிய இடத்தில் வைத்துப் போற்றினால் போதும்!

தமிழ், தமிழர் முன்னேற்றத்தை வளர்க்கத் 'திராவிட' நிழலில்பாடுபட்டவர்பாரதிதாசனார்-புரட்சிப் பாவலர் எனப் போற்றும் நாம் அவ்விளஞ் சூரியனின்' ஒளிக்கூறாக வளர்ந்தெழுந்துள்ள' பாலவரேறு அவர்களைப் பெற்றிருக்கிறோம். தமிழின முன்னேற்றங் குறித்த அவர்தம் பலதிறப் படைப்புகளை நோக்கின், அவற்றினூடாகத் தூயதமிழ் மொழி முன்னேற்றத்திற்கு அவர்களாற்றி வரும் அளப்பரிய தொண்டு புலனாகும். ஆயினும், தூய தமிழ் மரபை, வள்ளலார் தொடங்கி, மறைமலையடிகள் தொட்டு, கனக. சுப்புரத்தினம் வளர்த்து, பாவலரேறு காத்து, உயர்த்தி, புதுக்கி வளந்தந்து, உரமூட்டி வருவதை மட்டும் காண்பது நம் நோக்கமன்று.

இன்றுள்ள பலபடியான தமிழ் வளர்ச்சிகளை, மொழியியல் ஞாயிறு பாவாணர், ப. அருளி ஆகியவரன்றி, அனைத்துத் தரப்பிலிருந்தும் அறிந்து போற்றி முன்னேற்றும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டுள்ளது உ.த.மு.க. O

எங்கும் எதிலும் ஊழல்கள்!

இந்தியாவில் மக்கள் அன்றாடம் ஊழலைச் சந்திக்கின்ற நிலை இயல்பாக உள்ளது. காவல் நிலையத்திற்கோ வேறு அரசு அலுவலகங்களுக்கோ அவர்கள் சென்றால் கையூட்டு கொடுக்காமல் எந்தச் செயலும் நடப்பதில்லை. மின் விசை கொடுப்பது, துண்டு நிலங்களை ஒன்றுபடுத்துதல் முதலியவற்றில் மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். பள்ளிகளில் பெருந் தொகையைக் கொடுத்தால், தேர்வில் பார்த்தெழுத மாணவர்கள் அனுமதிக்கப் பெறுகின்றனர்,

அரசுப் பணிகளில் ஆள் எடுப்பதில்கூட கையூட்டு மலிந்திருக்கிறது. போபர்சு பேரத்தில் ஏறத்தாழ உரு 64 கோடி கையூட்டு கிடைத்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நாடு முழுவதிலும் அன்றாடம் தண்டப்படும் கையூட்டுகளையும் தரகுகளையும் கணக்கிட்டால் மொத்தப் பணம் 64 கோடிக்குக் குறைவாக இராது. இத்துடன் வரி ஏய்ப்புகளையும் சேர்த்தால் ஆண்டுதோறும் 64,000 கோடிக்கும் குறையாமல் கள்ளப் பணம் திரட்டப் படுவதாகச் சொல்லப்படுகிறது.

கீழ் மட்டங்களில் கையூட்டு, தரகு முதலியன மக்களுக்குப் பழகிப் போய்விட்டன என்றாலும், இப்போது மிக உயர்ந்த நிலையிலும் அவை புகுந்திருப்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்திருக்கின்றனர். **இதனால்தான் அதிகார நாற்காலிகளின் உட்கார்ந்திருக்கும் எவரையும் மக்கள் நம்புவதில்லை.**

கையூட்டு கொடுக்காவிட்டால் எந்த ஒரு சிறு செயலும் கூட நடக்காது என்னும் சூழ்நிலையில், அறமன்றங்களிலோ, ஆட்சி நிலைகளிலோ ஞாயம் கிடைக்கும், குறிப்பாக, ஏழைகளுக்குக் கிடைக்கும்—என்று எதிர்பார்க்க முடியாது. ஞாயத்தை (நீதியை) கட்டிக் காப்பது (அனைவர்க்கும் கிடைக்கும்படி செய்வது) தான் அரசின் முதல் கடமை ஆகும். ஆனால், இதில் அரசு அடியோடு தவறிவிட்டது. இந்தச் சீர்கேட்டை விரைவில் சரி செய்யாவிட்டால், நாட்டில் குழப்பமும் ஆட்சிக் கொடுமைகளுந்தாம் ஏற்படும் என்று உச்ச நெறி மன்றத்தின் தலைமை நடுவர் எச்சரித்திருக்கின்றார். ஏற்கனவே, மேலும் மேலும் அதிகமான ஆள்கள் சட்டத்தை மீறி நடந்து வருவதால், நாட்டின் பல பகுதிகளில் வன்முறை தலைவிரித்தாடுகிறது. மக்களின் வெறுப்புக்கு இதுவும் ஒரு முகாமைக் காரணமாகும்.

அரசு தன்னுடைய திட்டங்களையே சரியானபடி நடைமுறைப் படுத்தாமலிருப்பது மக்களின் வெறுப்புக்கு இன்னொரு காரணம். வறுமை ஒழிப்புப் பணி முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன. கடைசியாக வந்துள்ள மதிப்பீடுகளின்படி நான்கு ஆண்டுகளுக்கு முன், ஆறாவது திட்ட முடிவில் இருந்ததை விட இப்பொழுது வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ள மக்களின் எண்ணிக்கை 2.62 கோடி கூடியிருக்கிறது. ஏழாவது திட்ட முடிவுக்குள் மொத்த மக்கள் தொகையில் ஏழைகளின் எண்ணிக்கையை 25.8 விழுக்காடாகக் குறைப்பது என்ற குறியளவு இப்போது எட்டாக் கனவாகி விட்டது.

நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருவதே வறுமை பெருகுவதற்குக் காரணம். தொழில்களையும் அலுவலகங்களையும் விரைந்து புதினப் படுத்துவதால் இரண்டு தீய விளைவுகள் ஏற்படுகின்றன. முதலாவதாக விடு முதலில் பெரும் பகுதியை இது விழுங்கி விடுகிறது. இரண்டாவதாக, புதிய வேலை வாய்ப்புகள் ஏற்படுவதைத் தடுக்கிறது.

பொதுப் பரிமாற்ற முறை சீர்குலைந்திருப்பது மக்களின் துயரத்துக்கு மற்றொரு காரணம். மிகத் தேவையான பண்டங்கள் எல்லாவற்றின் விலைகளும் வானளாவ உயர்ந்திருப்பது இந்தச் சீர்குலைவுக்குச் சான்று. உணவுப் பொருள்கள், சர்க்கரை ஆகியவை மிகுதியாக உருவாகியிருந்தும், அவற்றின் விலைகள் உயர்ந்த வண்ணம் இருக்கின்றன. இடைத்தரகர்களும் ஆலை முதலாளிகளுமே இதனால் ஊதியம் அடைகின்றனர். ஆளும் கட்சியின் தேர்தல் கொடைக்குப் பணம் கொடுப்பதற்காக இவர்கள் சர்க்கரை விலையை உயர்த்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

அரசின் வீண் செலவுகள் மேலும் மேலும் அதிகரித்து வருவது மக்களின் நிறைவின்மைக்கு மற்றொரு காரணம். இந்தச் செலவைச் சரிகட்டுவதற்காக, உள் நாட்டிலும் வெளியிலும் அரசு கண்டபடி கடன் வாங்கி, அடுத்த தலைமுறைகளின் வருங்காலத்தை அடமானம் வைத்து வருகிறது. அதோடு பற்றாக்குறை பொருள் முறையையும் (அதிகமாகத் தாள் உருபாக்கள் அச்சிடுவதையும்) அது கையாள்கிறது. இதனால் ஒவ்வொருவருடைய வாங்கும் ஆற்றலும் குறைகிறது. இது மக்களை அரசு "சட்டைப் பையடி" செய்வதற்குச் சமமாகும். ஏழாவது திட்டக் காலத்தில், எதிர்பார்க்கப் பட்டதை விட, இரண்டரை மடங்குக்கு மேல் பற்றாக்குறை பொருளளவு அதிகரிக்கக் கூடும் என்று சேமிப்பு வைப்பகத்தின் (ரிசர்வு வங்கியின்) அண்மை அறிக்கை குறிப்பிட்டிருக்கிறது.

மேற் சொன்ன குறைகளை நீக்குவதற்கு முயற்சி செய்யாமல் தகிடு தத்தங்களிலிலும் தொலைக்காட்சி—வானொலிப் பரப்புதலிலும் அரசு ஈடுபட்டிருக்கிறது. இந்தத் தந்திரங்கள் வெற்றி பெற மாட்டா. ஏனெனில் மக்கள் இப்பொழுது முன்னை விட முதிர்ச்சியடைந்திருக்கின்றனர்.

—பானு பிரதாப் சிங்.

(3-ஆம்பக்கத் தொடர்ச்சி)
செயலாலும், ஒண்பொருள் தந்தும் உ.த.மு.க.வை வலிமைப்படுத்தும் பொறுப்பு நமக்குள்ளது. ஒவ்வொருவர்க்கும் ஒவ்வொன்றே எளிதாகும்; இயல்வதாகும் என்பதை உங்களைப் போலவே நானும் அறிந்திருக்கிறேன் எனவே ஏதேனும் ஒருவகையில் உங்கள் இயங்குதலை எதிர்பார்த்திருக்கிறேன் என்பதை மறந்து விடாதீர்கள். வெங்காலூர் அமைப்பும் சரி, திரு. **தமிழ்மறவனும்** சரி, மலையகப் பெரியவர் **சா. சி. சுப்பையா** அவர்களாயினும் சரி, பிரான்சுப் பெருந்தகை **அரிமா வளங்கோ** ஆயினும் நன்று, அமெரிக்காவில் உள்ள திருவாட்டி **செந்தாமரை ஆறிறைவன்** எனினுமாகட்டும், புதுவை மொழிக்கதிரவன் அருளியே எனினும் தொடர்பு கொண்டாலன்றோ உ.த.மு.க. பெயர்ப் பொருத்தம் கொண்டதாக இருக்கும்! **'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே'** என்று ஓய்ந்திருப் போமா நாம்? தமிழகமே வையகம் என்று வாளா விருப்பதா? 'உலகம்' என்பதை நீக்கித் 'தமிழக முன்னேற்றக் கழகம்' அமைப்பவர்களுக்கு வழி விட்டு விடுவோமா? **பாவலரேறு** அவர்களின் உ.த.மு.க.வின் தோற்றத்தின் நோக்கம் நாம் அறியாதவொன்றே? எண்ணுங்கள், எழுதுங்கள், சிந்தனை ஒன்றுகுங்கள்; செயல் முனைப்புக் கொள்ளுங்கள் என்று மறுபடி மறுபடி வேண்டிக் கொள்கின்றேன், **'தமிழ்நிலம்'** வெளி வருவதையும், தமிழ் நெஞ்சங்கள் துணை வருவதையும், நமக்குள் ஏற்படும் ஒவ்வொரு சிறு அசைவையும் 'முன்னேற்றம்' 'வளர்ச்சி' என்று போற்றுவோம், சோர்வை மாற்றுவோம்!

தொடர்பு கொள்ளுங்கள்! தொல் தமிழின முன்னேற்ற முயற்சிகளுக்குத் தோள் தந்து உதவுங்கள், நன்றி.

அன்புடன்,
பறம்பை அறிவன்,
பொதுச் செயலாளர்.

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)
'பாராட்டு', 'வாழ்த்துகள்' குறித்து 'நாம் இனநல மேன்மை' ஒன்றினை உயர்த்திப் பிடிக்கவும், அவர்கள் பாராட்டு, பணம்பெற, வாழ்வில் வளம்பெற என்று துடிப்பதும் காண்கிறோம்!

இயக்கங்களை இருவகைப் படுத்திச் சரியான ஒன்றின் தடத்தில் தடந்தோள் தமிழர்களே நடையிடுங்கள்! மூன்றுவதியக்கம், மூன்றுவது அணி என்பது நமக்கில்லை...! எதிர் இயக்கங்களில் உள்ள உள்உடைவுகளைக் கண்டு ஏமாற மாட்டோம். அவற்றை ஒருசேர எதிர்ப்போம்! ஏனெனில் அவை தங்களின் நலன்களைத் தாக்குறச் செய்யும்போது ஒன்றுபட்டு நம் நேர்மைக்கு, ஞாயத்திற்கு அறை கூவலாகி விடும்!

எச்சரிக்கை, விழிப்புணர்வு இல்லையெனில்
தமிழினம் 'போலிகளால்' மீளவும்
அடிபடவும், அடிமைப் படவும் வேண்டிவரும்!

TN/MS (C)657

நூல்-அஞ்சல்

பெறுநர்

நினைவிருக்கட்டும்!
சென்னை மாநகரில்
பாட்டாளி மக்கள் கட்சி நடத்தும்

தமிழர் வாழ்வுரிமை மாநாடு

செப்டம்பர் 10, 11, 12—ஆம் நாள்களில்
பெரியார், திடலில் நடைபெறுகிறது.
அறிஞர்களும் அயல்நாட்டுப் பேராளர்களும்
தமிழ்ச் சான்றோர்களும் கலந்து
கொள்கின்றனர்.
தவறாமல் அனைவரும் வருக!

சிந்தனைக்கு-78

தமிழும் தமிழினமும் தமிழ்நாடும் சீரழிந்து அடிமையுற்றுக் கிடக்கும் நிலையில், இந்திய ஒருமைப்பாடும், ஒற்றுமையும் தமிழர்களுக்குப் பெரிதில்லை. அவற்றின் தேவை இரண்டாம் படியே!

தமிழ்நிலம்

ஆசிரியரும், வெளியிடுபவரும்.
பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர், தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5
தொலைபேசி எண் : 847829.

Scanned with CamScanner